# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

02.10.2020 வெள்ளிக்கிழமை


## புதினம் தெரியுமோ

இண்டைக்கு யாழ்ப்பாணம் வந்த அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல ஒரு அறப்படிச்ச கதை சொல்லியிருக்கிறார் பாருங்கோ. கேக்கவே புல்லரிக்குது. அவர் ஒரு ஊடகத்துறை அமைச்சர் வேற. தியாகி திலீபனையும்,

2

# ‘20’க்கு பலமான எதிர்ப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

கொழும்பு, ஒக். 2

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினரும், அந்தக் கூட்டணி யில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சியினரும் 20ஆவது திருத்தத்துக்கு எதிராகவே வாக்களிப்பர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

2

## வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட 182பேர் இன்று விடுவிப்பு

வவுனியா, ஒக். 3

ஜோர்தான் நாட்டில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா வேலங்குளம் விமானப் படை தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டி

2

## ரணில் – சஜித் அணிகள் விரைவில் நேரில் பேச்சு

கொழும்பு, ஒக். 2

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலருக்கும் இடையில் விரைவில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. ஐ.தே.கவின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த ருவான் விஜேவர்தனவுக்கு தொலைபேசி ஊடாக சஜித் வாழ்த்து தெரிவித்தபோது, நேரடி சந்திப்புக்கான அழைப்பை ருவான் விடுத்திருந்தார் எனவும், இதன்பிரகாரமே மேற்படி சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

சஜித் தலைமை

2



## மகாத்மா காந்தியின் பிறந்த தினம் யாழ்ப்பாணத்திலும் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாக உள்ள மகாத்மா காந்தியின் சிலையடியில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் காந்தி

2

## கட்டுநாயக்க மூடப்பட்டதால் ரூ.15 ஆயிரம் கோடி இழப்பு!

கொழும்பு, ஒக். 2

கட்டுநாயக்க விமான நிலையம் மூடப்பட்டுள்ளமையினால் இந்த வருடம் சுமார் 15 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட வருமானம் இல்லாமல் போயுள்ளது என்று கட்டுநாயக்க விமான நிலை

2

## ‘20’க்கு எதிராக வாக்களிக்க முற்போக்கு கூட்டணி முடிவு

கொழும்பு, ஒக். 2

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

முற்போக்கு கூட்டணியின் அரசியல் உயர்பீடம் இவ்வாரம்கூடி இது குறித்தான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடும் எனவும் தெரியவருகின்றது.

20ஆவது திருத்தத்தில் ஜனநாயகத்துக்கு விரோதமான அம்சங்கள் இருப்பதா

2

## தமிழரசின் செயலாளராக சத்தியலிங்கம் நியமனம்!

வவுனியா, ஒக். 2

இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளராக முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவுசெய்யப்பட்டார். கட்சியின் பொதுச்செயலராகச் செயற்பட்டுவந்த முன்னாள் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் அண்மையில் பதவி விலகினார். இதையடுத்து பொதுச்செயலர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டு வந்தது. இந்த நிலையில் கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுத்துச்

2

## சிறுவர் தினத்தை முன்னிட்டு கைதிகளின் பிள்ளைகளுக்கு பெற்றோரை பார்க்க வாய்ப்பு

கொழும்பு, ஒக். 2

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, கைதிகளின் பிள்ளைகளுக்கு தமது பெற்றோரைப் பார்க்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச சிறுவர்தினம் உலக அளவில்

2

# ட்ரம்புக்கு கொரோனா



## தொற்றியது அவரது மனைவிக்கும்

வொஷிங்டன், ஒக். 2

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவருடைய மனைவி மெலனியா ட்ரம்ப் ஆகியோருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ட்ரம்பின் நெருங்கிய உதவியாளர் ஒருவருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# ‘20’க்கு...

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'எதேச்சாதிகார குடும்ப ஆட்சிக்கு வழிவகுக்கும் 20ஆவது திருத்தத்தைத் தோற்கடிப்பதே எமது இலக்காகும். எனவே, கொள்கை அடிப்படையிலும், மனசாட்சியின் பிரகாரமும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 20க்கு எதிராகவே வாக்களிப்பார்கள்.
எமது கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியாக 20ஆவது திருத்தத்தை எதிர்த்தே வாக்களிப்பார்கள். இது சம்பந்தமாக கட்சித் தலைவர்களுடன் எமது தலைவர் பேச்சு நடத்துவார். 20ஆவது திருத்தத்தை எதிர்ப்பதற்கு கொள்கை அடிப்படையில் இணக்கப்பாடு ஏற்கனவே எட்டப்பட்டுள்ளது.
அதேவேளை, 19ஆவது திருத்தத்தில் சிற்சில குறைபாடுகள் உள்ளன. அவற்றை நிவர்த்திசெய்துகொண்டு முன்நோக்கி பயணிப்பதற்கே அரசு முயற்சிக்கவேண்டும். அதற்கேற்றவகையில் திருத்தங்கள் இடம்பெறவேண்டும். ஆனாலும் எதேச்சாதிகார பயணமே ராஜபக்ச தரப்பின் நோக்கமாக இருக்கின்றது. அத்தகைய நகர்வுகளுக்கு எம்மால் ஆதரவு வழங்கமுடியாது' என்றார். (ம-44)

# ரணில் – சஜித் அணிகள்...

யில் உதயமாகவுள்ள 'ஐக்கிய கூட்டமைப்பில்' இணைந்து செயற்படுவது சம்பந்தமாகவும், மாகாண தேர்தலை ஒன்றிணைந்து எதிர்கொள்வது பற்றியும் இதன்போது அவதானம் செலுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-44)

# கைதிகளின்...

நேற்றுக் கொண்டாடப்பட்டது. இலங்கையிலும் சிறுவர்களின் நலன்களை வலியுறுத்தி பேரணிகள், விழிப்புணர்வுகள் என்பன முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் விளக்கமறியலில் உள்ள கைதிகளின் பிள்ளைகள் சிறுவர்தினத்தை முன்னிட்டு தமது பெற்றோரைப் பார்க்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# கட்டுநாயக்க...




யம் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் உபதலைவர் ரஜீவ் சூரிய ஆராச்சி தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வழமைபோன்று விமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் தற்போது 15ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிக இலாபம்பெற வாய்ப்புகள் இருந்தன. இந்த வருடம் 600 கோடி ரூபாவைத்தான் இலாபமாகப் பெறமுடிந்தது. இதுவரையிலும் விமான செயற்பாடுகள் பெருமளவு நிறுத்தப்பட்டுள்ளன. இந்தியாவில் கொரோனா பெருந்தொற்றுத் தீவிரமடைந்துள்ளமையால் கட்டுநாயக்க விமான நிலையத்தை தொடர்ந்தும் திறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ம-இ)

# மகாத்மா காந்தியின் பிறந்த தினம்....

யின் சிலைக்கு இந்திய துணைத்தூதுவர் கே.பாலசந்திரன் மலர்மாலை அணிவித்தார். அதன்பின்னர் அரசியல் பிரமுகர்கள் மலர்மாலை அணிவித்தனர்.
இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், சிறிதரன், யாழ் மாவட்ட செயலர் க.மகேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரவணபவன், சுரேஸ் பிறேமச்சந்திரன், யாழ் மாநகர சபை ஆணையாளர் எனப்பலர் கலந்து கொண்டனர். (ம-20)



# 182பேர் இன்று...

ருந்த 182 பேர் இன்றையதினம் விடுவிக்கப்பட்டனர்.
கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டுக்குள் அழைத்துவரும் செயற்பாடுகள் அரசால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் ஜோர்தானில் இருந்து அழைத்துவரப்பட்ட பயணிகள் வவுனியா வேலங்குளம் விமானப்படை தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டனர். அவர்கள் தமது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்ததை அடுத்து தத்தம் சொந்த இடங்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டனர். (ம-110)

# 20’க்கு எதிராக....

லேயே அதனை எதிர்த்து வாக்களிப்பதற்கும், 20க்கு எதிராக முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவை வழங்குவதற்கும் கூட்டணி தீர்மானித்துள்ளது.
20ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது எனவும், வாக்கெடுப்பின்போது சிலர் நிடுநிலை வகிக்கவுள்ளனர் எனவும் வெளியாகியுள்ள தகவல்களை கூட்டணியின் உறுப்பினர் இன்று நிராகரித்துள்ளார். (ம-44)

# தமிழரசின்....

செல்வதற்காக கட்சி மட்டத்தில் பொதுச்செயலாளரொருவரை நியமிக்கும் பொருட்டு துணைத் தலைவர்களாகச் செயற்பட்டு வந்த வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரில் ஒருவரை பொதுச் செயலாளராக நியமிக்க உத்திதே சிக்கப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் தமிழரசுக்கட்சியின் பொதுச் சபை கூடும் வரையிலும் துணைத் தலைவராக செயற்பட்டு வந்த ப. சத்தியலிங்கம் பொதுச்செயலாளராக செயற்படும் வகையில் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
இவ்விடயம் தொடர்பாக வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் வைத்தியகலாநிதியுமான ப.சத்தியலிங்கத்திடம் கேட்டபோது அவரும் அதனை உறுதிப் படுத்தியிருந்தார். இந்த விடயத்தைத் தேர்தல்கள் ஆணைக்குழு வுக்குக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார். (ம-22,110)

# ட்ரம்புக்கு...

ட்ரம்பிடமும் அவரது மெலனியா ட்ரம்பிடமும் மாதிரிகள் பெறப்பட்டன. அவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து இருவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை இன்று காலை உறுதிப்படுத்தப்பட்டது.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இன்னும் சில வாரங்களில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரான ட்ரம்ப் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை அவர் சார்ந்த குடியரசுக் கட்சிக்குப் பின்னடைவு என்று கருதப்படுகின்றது. ட்ரம்புக்கும் அவரை எதிர்த்து போட்டியிடும் ஜனநாயக் கட்சியின் வேட்பாளரான பிடனுக்கும் இடையில் அண்மையில் நேரடி விவாதம் நடைபெற்றது. இதனால் பிடனுக்கும் கொரோனா சோதனை நடத்தப்படவுள்ளது.
கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்க மக்கள் முகக்கவசம் அணியவேண்டும் என்று பரிந்துரைக்க மாட்டேன் என்று ட்ரம்ப் முன்னதாகத் தெரிவித்திருந்தார். மட்டுமல்லாமல் தானும் முகக்கவசங்களை அணிவதைத் தவிர்த்து வந்தார். அவரது மருத்துவப் பிரிவின் அறிவுறுத்தல் மற்றும் எதிர்ப்புக்களைத் தொடர்ந்தே முகக்கவசங்களை அணிந்தார். இந்த நிலையில் தற்போது அவர் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## புதினம் தெரியுமோ?

ஒசாமா பின்லேடனையும் ஒப்பிட்டுக் கதைச்சிருக்கிறார் பாருங்கோ. ஒசாமா பின்லேடனுக்கு அமெரிக்காவில சிலை வைக்க விடுவினமே, அதுபோல தான் தியாகி திலீபன் நினைவேந்தலும் எண்டு மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டிருக்கிறார் ரம்புக்வெல. அகிம்சை வழியில் போராடி உயிர்நீத்த தியாகி திலீபனுக்கும், பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த ஒசாம பின்லேடனுக்கும் அமைச்சருக்கு வித்தியாசம் தெரியேல எண்டா பாத்துக்கொள்ளுங்கோ.
இப்பிடியான ஆக்களிட்டத்தான் இப்ப நாடு இருக்குக் கண்டியலே. அதோட இன்னொரு கதையும் சொல்லியிருக்கிறார். தியாகி திலீபனை நினைவு கூருவது போதைப் பொருள் பாவிச்சு இறந்த ஆள நினைவேந்துவது போலவாம் எண்டும் ஏதோ சொன்னாராம். அது ஏன் சொன்னார் எண்டு எனக்கு ஒண்டும் விளங்கேல கண்டியளோ.
இங்க இருக்கிற தமிழ் அமைச்சர் ஒருத்தர்தான் இப்பிடி ரெண்டு மூண்டு நாளா கத்திக் கொண்டு திரியிறார். அவருக்கு விளக்கம் குறைவு எண்டு நினைச்சுப் போட்டு இருந்தா, இப்ப ஹெகலியவும் அதே மாதிரி வந்து கூவிட்டுப் போறார். இவையளுக்கு அரசியல் செய்ய ஒண்டும் இல்லாட்டி இப்பிடிக் கூவிக் கொண்டு திரியிறதுதான் வேலை பாருங்கோ. இப்பிடியான ஆக்கள நாடாளுமன்றத்துக்கு அனுப்பிப் போட்டுத்தான் நாடு முன்னேறும் எண்டு நாங்கள் பாத்துக் கொண்டிருக்கிறம் கண்டியளோ.

பட்சி

# 16 ஆண்டுகளின் பின் கண்டுபிடிக்கப்பட்ட சிறுவனுக்கு உரிமைகோரும் மற்றொரு தாய்

அம்பாறை, ஒக்.2

அம்பாறைப் பகுதியில் சுனாமியின்போது காணாமல் போயிருந்த நிலையில் தாயா ரால் கண்டுபிடிக்கப்பட்ட சிறுவனுக்கு மற்றமொரு பெண்ணும் உரிமை கோரியுள் ளார். நூறுல் இன்ஷான் என்ற பெண்ணே சிறுவனின் உண்மையான தாய் தான் எனத் தெரிவித்துள்ளார்.

சிறுவன் தனது மகன் என்பதற்கான ஆதா ரங்கள் தன்னிடம் உள்ளன என அவர் கூறியுள்ளார்.

2004ஆம் ஆண்டு டிசம்பரில் அம்பாறை சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு பகுதியில் சுனாமி தாக்கிய தையடுத்து தனது ஐந்து வயது மகன் காணா மல் போயிருந்தார். அவரை தான் போராடி மீட்டுள்ளார் என அபுசாலி சித்தி ஹமா லியா என்ற பெண் அண்மையில் தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# கடன் வழங்குவது தொடர்பில் சி.ஆர்.ஐ.பி. தீர்மானிப்பதில்லை

## அதன் முகாமையாளர் விளக்கம்

கொழும்பு, ஒக்.2

வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் தமது நிறுவனத்துக்கு இல்லை என்று இலங்கை கடன் தகவல் பணியகம் (சி.ஆர்.ஐ.பி) தெரி வித்துள்ளது. ஒருவரின் கடன் நிலைமை தமது தரவுகளின் படி மோசமான நிலையில் இருந்தாலும் கூட அவருக்கு கடன் வழங்க வேண்டாம் என்று வங்கிகளுக்கு தமது நிறுவகம் அறிவிப்பதில்லை என்று கடன் தகவல் பணியக பொது முகாமையாளர் நந்தி அந்தனி தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பல்வேறு நிதி சிக்கல்களில் இருப்பதால் அரச வங்கிகள் வாடிக்கையா ளர் கடன் விடயத்தில் தளர் வுப் போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரதமர் மஹிந்த அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் இலங்கை கடன் தகவல் பணியகத்தின் தரவு களே வங்கிகள் கடன்களை வழங்கும்போது முக்கிய ஆவணமாக கொள்ளப்படும் நிலையில் ஏற்கனவே கடன் சுமையில் உள்ளவர்கள் கடன் களை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என முறைப் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பிலேயே கடன் தகவல் பணியகம் தனது நிலைப்பாட்டை அறிவித்துள் ளது. வங்கிகள் வாடிக்கையா ளர்களுக்கு கடன்களை வழங் குகின்றபோது சி.ஆர்.ஐ.பியின் தரவுகள் பார்க்கப்படுகின்றன. எனினும் அதனடிப்படையில் மட்டும் வாடிக்கையாளர்க ளுக்கு கடன் வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படு வதில்லை. ஏனைய காரணிக ளையும் வங்கிகள் கவனத்தில் கொள்கின்றன என்று நந்தி அந்தனி மேலும் தெரிவித்துள் ளார். (வ-இ)

# கிளிநொச்சியில் விழிப்புணர்வு நடைப்பயிற்சி நாளைமறுதினம்

கிளிநொச்சி, ஒக்.2

கிளிநொச்சி மாவட்டத்தில் மாபெரும் சமூக விழிப்புணர்வு நடைப் பயிற்சி ஒன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது.

கிளிநொச்சி சமூக அபிவிருத்திப் பேரவை யின் ஏற்பாட்டில், உடல் ஆரோக்கியத்துக் கும் சமூக விழிப்புணர்வுக்குமான நடைப் பயிற்சியாக இது இடம்பெறவுள்ளது.

இந்த நடைப் பயிற்சி காலை 6.45 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்றிலில் ஆரம்பித்து, கிளிநொச்சி மத்திய கல்லூரி வரை நடைபெறவுள்ளது.

எனவே இதில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கிளிநொச்சி சமூக அபிவி ருத்திப் பேரவை கோரியுள்ளதோடு, நடைப் பயிற்சிக்கு வருகின்றவர்கள் அதற்கேற்ற உடை, காலணி, தொப்பி என்வற்றை அணிந்து வருமாறும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். (ந-214)

# இலங்கை மாணவன் தமிழகத்தில் சாவு

சென்னை, ஒக்.2

இலங்கை தமிழர் முகாமைச் சேர்ந்த மாணவன் ஒருவன் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார். தமிழகத்தின் ஈரோடு மாவட்டத்திலுள்ள நஞ்சை புளியம்பட்டி பவானி ஆற்றில் நேற்று முந்தி னம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தனுசுராஜ் (வயது 17) என்ற அந்த மாணவன் நண்பர்களுடன் ஆற்றில் குளிக்கச் சென்றுள் ளார். நீச்சல் தெரியாத நிலையில் ஆழமான பகுதிக்குச் சென்றமையால் ஆற்றில் மூழ்கி அவர் உயிரிழந்துள்ளார். (வ-இ)

# ஐஸ் போதையுடன் இருவர் கைது

கொழும்பு, ஒக்.2

ஐஸ் ரக போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கல்கிஸை பொருப்பன பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்க மைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக் கைகளின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர். அவர்களிடமிருந்து 20 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# மரணத்தில் சந்தேகம் விசாரணை மீள ஆரம்பம்

களுத்துறை, ஒக்.2

மரணத்தில் பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தினால் மலர்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சடலம் மீண்டும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

வயோதிப பெண்ணொருவர் உடல் நிலை பாதிப்பால் கடந்த 27ஆம் திகதி களுத்துறை மருத்துவமனையில் சேர்க் கப்பட்ட பின் உயிரிழந்தார். அவரின் சடலம் புதைப்பதற்காக மலர்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதன் போது அந்தப் பெண் கொலை செய் யப்பட்டே மரணம் சம்பவித்துள்ளது. எனப் பொலிஸாருக்கு தகவல் கிடைத் தது. அதையடுத்து பெண்ணின் சடலம் மீள் பிரேத பரிசோதனைக்காக களுத் துறை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. (வ-இ)

# டெங்கு பரவல் அதிகரிப்பு தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.2


டெங்கு நோயின் அதிகரிப்பு தொடர் பில் தேசிய டெங்கு நோய்த் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் அநுர ஜெய சேகர எச்சரிக்கை விடுத்துள்ளார். டெங்கு அபாய நிலை தற்சமயம் இல்லாத போதும் மழை காலமாகை யால் எதிர்வரும் மாதங்களில் அது தீவி ரமடைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே பொதுமக்கள் நுளம்புகள் பெருகாமல் இருக்கும் வகையில் தமது சுற்றாடலை சுத்தமாக வைத்தி ருக்க வேண்டும் என்று அவர் கேட் டுக்கொண்டுள்ளார். நாட்டில் கடந்த ஜனவரியிலிருந்து தந்போது வரை 27 ஆயிரத்து 733 டெங்கு தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள் ளனர். இதில் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 11 ஆயிரத்து 608 தொற் றாளர்கள் கண்டறியப்பட்டனர். அவர்களில் 8ஆயிரத்து 14பேர் மேல் மாகாணத்திலிருந்து கண்டறியப்பட் டுள்ளனர். (வ-இ)

# பிக்குமாருக்கான காப்புறுதி திட்டம் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைப்பு

கொழும்பு, ஒக்.2


பௌத்த குருமாருக்கான புது புன் சுரக்ஷா சுகாதார காப்பு றுதி திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது பிக்குமாருக்கான காப்புறுதி உரிமைகளை அவர்களிடம் வழங்கி திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார். புத்தசாசன சமய மற்றும் கலா சார அமைச்சினால் செயற்படுத் தப்படும் இந்தக் காப்புறுதித் திட்டம் 15,000 பௌத்த பிக்கு



மார்களை உள்ளடக்கியுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்கு, கலாநிதி போதாகம சந்திம தேரர் மற்றும் விசேட வைத்திய நிபு ணர் சர்தா ஹேமபிரிய, விசேட வைத்திய நிபுணர் பிரபா சமர கோன், சிறியானந்த விஜேகோன், விசேட வைத்திய நிபுணர் விமல சிறி அபேகோன், பேராசிரியர் வசந்தி பிங்டோ, விசேட வைத் திய நிபுணர் நிர்மலா குணவர்தன உள்ளிட்ட நன்கொடையாளர் கள் பலர் பங்களிப்பு செய்துள்ள னர். புதுபுன் சுரக்ஷா சுகாதார காப்புறுதி திட்டத்துக்கு புத்தசாசன நிதியத்தினால் 40 மில்லியன் ரூபா நிதியை ஆரம் பத்திலேயே வழங்குமாறு பிரத மர் ஆலோசனை வழங்கியுள் ளார். அதற்காக அரசாங்கத்தி னால் மேலும் ரூபாய் 5 கோடி நிதி பங்களிப்பு செய்யப்பட வுள்ளதுடன், இதுவரை நன் கொடையாளர்களிடமிருந்து 73 இலட்சம் ரூபாய் நிதி நன் கொடையாக கிடைக்கப் பெற் றுள்ளது. (வ-இ)

தடுப்பூசி வந்தாலும் கூட

# கொரோனா தற்போது கட்டுக்குள் வராது



## உலக சுகாதார அமைப்பு கூறுகிறது

ஜெனிவா, ஒக்.2

நடைமுறையில் உள்ள கொரோனாத் தடுப்பூசியை உலகம் முழுவதும் விநியோகம் செய்தாலும் இந்தக் காலப்பகுதியில் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது. இவ்வாறு உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. உலகளவில் உள்ள தலைசிறந்த விஞ்ஞானிகள் சிலர் மேற்கொண்ட விசேட ஆய்வின் பின்னரே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது என அந்த அமைப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. இனி வரும் காலம் குளிருடனான காலநிலையைக் கொண்டிருக்கும். இதனால் கொரோனா வைரஸ் மனித உடலில் வாழ்வதற்கான சாத்தியங்கள் அதிகமாக காணப்படுகின்றமையே இதற்குக் காரணம். இருப்பினும் இந்த வைரஸை முழுமையாக அழிப்பதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுக்க வேண்டும் என பிரிட்டன் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல், கொரோனாத் தொற்றுக்கு எதிராக 200க்கும் அதிகமான தடுப்பூசிகள் உலகளவில் தயாரிக்கப்பட்டுள்ளன. எனினும், கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க குறைந்தது ஒருவருட காலம் தேவைப்படும் என அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (வ-இ)

---

மாடியிலிருந்து தள்ளி விழுத்தி

# பெண்ணைக் கொலை செய்த குற்றச்சாட்டில் 4 பேர் கைது

கொழும்பு, ஒக்.2

கொள்ளுப்பிட்டி அடுக்குமாடிக் குடியிருப்பில் 5 ஆவது மாடியிலிருந்து ஒருவரைத் தள்ளி விழுத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த குடியிருப்பில் வசி பெண் ஒருவரை கத்தியால் குத்தி, அவரை 5 ஆவது மாடியிலிருந்து தள்ளி விழுத்தி, அவரது தங்கச்சங்கிலியை அபகரித்தனர் என்ற சந்தேகத்தில் 3 ஆண்களும், பெண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர், அவர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படுவார்கள். (ற-இ)

---

# நெற்செய்கை ஆரம்பித்துள்ளதால் கால்நடைகளை கட்டி வளர்க்குக!

*கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக்.2

நீர்வேலி மற்றும் கோப்பாய் தரவை வயல் நிலங்களில் தற்போது நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது குறித்து கமக்கார அமைப்புக்கள் தெரிவித்துள்ளதாவது:

தரவை வயல் நிலங்களில் அதிகமானோர் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். கால்நடை வளர்ப்போர் நெல் அறுவடை செய்யும் காலம் வரைக்கும் கால்நடைகளை கட்டி வளர்க்க வேண்டும். இதை மீறி கால்நடைகள் அவிட்டு விடப்பட்டு பயிர்களை மேய்ந்தால், சம்மந்தப்பட்ட கால்நடை உரிமையாளர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-17)

---

# மழை பெய்யும் சாத்தியம்

கொழும்பு, ஒக்.2

நாட்டின் மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களின் சில பகுதிகளிலும் வடமேல் மாகாணத்தின் சில பகுதிகளிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

வடக்கு,வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் சில பகுதிகளிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் வீசும் காற்றின் வேகம் 40 கிலோ மீற்றராக அதிகரிக்கக் கூடும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)

---

# புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் இன்று கடமையைப் பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம், ஒக்.2



வடமராட்சி வலயத்துக்கான புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக அபிராமி பார்த்தீபன் இன்று வெள்ளிக்கிழமை முதல் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். இந்த நிலையில் பதில் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய ஆ.கிருபாகரன், அவரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளார்.

இவரை வரவேற்கும் நிகழ்வு இன்று பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி மா.நவநீதமணி தலைமையில் நடைபெற்றது.

இந்த வரவேற்பு நிகழ்வில் தென்மராட்ச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.கிருபாகரன், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் ர.இரவீந்திரன், ஓய்வு பெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.செல்வராசா, ஓய்வு பெற்ற அதிபர் சு.இராகவன் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர்.

---

# கோப்பாயில் இம்முறை அதிக நெற்செய்கை

யாழ்ப்பாணம், ஒக்.2

கோப்பாய் வடக்கு வயல் நிலங்களில், இந்த முறை கூடுதலான நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே செய்கை இன்றி தரிசு நிலங்களாக காணப்பட்ட வயல் நிலங்களை, செய்கையாளர்கள் உழுது பசளை போட்டு நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த முறையை விட இந்த முறை செய்கையின் போது அதிகமான வயல்களில் நெல் விதைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் வயலை அண்டியிருக்கும் தாமரைக்குளமும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

குளத்தில் மழை நீரைக் கூடுதலாகச் சேமிக்கும் முகமாக, இந்தக் குளம் துப்புரவு செய்யப்படுகின்றது. சிறுதானிய செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு இந்தக் குளம் முன்கூட்டியே துப்புரவு செய்யப்பட்டுள்ளது.(ற-17)

---

# யாழில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.2

யாழ்ப்பாணத்தில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. இதனால் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாஷையூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறை, கல்வியங்காடு போன்ற மீன் சந்தைகளில் குறைந்தளவு கடலுணவுகளே வந்து சேர்கின்றன. இதுவே விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இதே சமயம் குடாநாட்டு கடற்பரப்பில் பிடிக்கப்படும் கடலுணவுகள் தெற்கே ஏற்றுமதி செய்யப்பட்டும் வருகின்றன.

தெற்கிலிருந்து வரும் வாகனங்கள் கடலுணவுகளை அதிகமாக எடுத்துச் செல்கின்றன. கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் மற்றும் ஊரடங்கு காலத்தில் குடாநாட்டில் கடலுணவுகள் ஏற்றுமதி இன்றி தேங்கிக் காணப்பட்டமையோடு, அவற்றின் விலையும் வீழ்ச்சி அடைந்து காணப்பட்டன. (ற-17)

---

# கஞ்சாவுடன் ஒருவர் வவுனியாவில் கைது

வவுனியா, ஒக். 2

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலங்குளம் பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பூவரசங்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இன்று அதிகாலை வேலங்குளத்தில் உள்ள சந்தேகநபரின் வீட்டைச் சோதனையிட்டபோது அவரிடமிருந்து 775 மில்லிகிராம் கேரளக்கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கு 26 வயது அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-110)



# இந்து சமுத்திர பிராந்தியத்தின் மையமாக இலங்கை முனைப்பு

## தரமான உட்கட்டமைப்புக்காக ஜப்பானிடம் உதவி கேட்கிறது

கொழும்பு, ஒக். 2

இந்திய சமுத்திர பிராந்தியத்தில், வர்த்தக மற்றும் கடல் மையமாக தன்னை நிலை நிறுத்துவதற் கான முயற்சிகளில் இலங்கை இறங்கியுள்ளது. இதற்காக ஜப்பானின் உதவியை இலங்கை நாடியுள்ளது.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல்சார் பிரச்சனைகள் குறித்த நான்காவது, இலங்கை ஜப்பான் உரையாடல் இன்று காணொளியில் நடைபெற்றது. ஜப்பானிய தூதுக்குழுவில் வெளியுறவு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், ஜப்பான் கடலோர காவல்படை மற்றும் கொழும்பில் உள்ள ஜப்பானிய தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

இலங்கை தூதுக்குழுவில் வெளியுறவு அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம், துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சகம், பாதுகாப்புப் பணியாளர்கள், கடற்படை, வான்படை, கடலோர காவல்படைத் துறை, இலங்கை துறைமுக ஆணையம் மற்றும் வணிகக் கப்பல் செயலகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

உரையாடலின் போது, இந்துபசிபிக் பிராந்தியத்தில் பரவியுள்ள பலதரப்பு கடல் சார் முயற்சிகள் குறித்து தீவிர விவாதங்கள் நடத்தப்பட்டன. (ம-இ)

பாடசாலை இணைப்பின்போதான

# நேர்முகத் தெரிவில் சில தளர்வுகள்

கொழும்பு, செப். 2

அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு பிள்ளைகளை சேர்ப்பதற்காக நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையின்போது வழங்கப்படும் வீட்டு உறுதிக்கான புள்ளிகளை தளர்த்துவது தொடர்பில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது.

இவ்வாற அமைச்சரவை முடிவுகளை ஊடகங்களுக்கு அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பில், அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இது தொடர்பில் தெரிவித்தார்.

குறித்த நேர்முகப் பரீட்சையின்போது வீட்டு உறுதி வைத்திருக்கின்றமைக்காக 20 புள்ளிகள் வழங்கப்படும் போதிலும், தங்களது பதிவு செய்யப்பட்ட வீட்டு முகவரியை சரிபார்ப்பதற்காக தற்போது பல பெற்றோர்களினால் வீட்டு உறுதியை வழங்க முடியாதிருப்பதாக அவர் தெரிவித்தார். இதன் காரணமாக பல பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு தவறியுள்ளனர்.

30 அல்லது 40 வருடங்களுக்கு மேலாக குறிப்பிட்ட சில பாடசாலைகளுக்கு அருகில் மக்கள் வசித்து வந்தாலும், அவர்களினால் தங்களது வீட்டு உறுதிகளைக் காண்பிக்க முடியாது போனமையால், பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்க்க முடியாமல் போயுள்ளனர். இந்த முறையை ஒழிக்கவும், புதிய முறையை அறிமுகப்படுத்தி சுற்றுநிருபத்தை வெளியிடவும் கல்வி அமைச்சர் விரும்புகின்றார்.

வாக்காளர் பட்டியலில் 5 வருடங்களுக்கும் மேலாக ஒரே முகவரியின் கீழ் பெயர் பதிவு செய்யப்பட்டவர்கள், அவர்கள் தாம் பதிவு செய்யப்பட்ட முகவரியை கிராம அலுவலர் அல்லது உரியஅதிகாரி ஊடாக ஆவணங்கள் மூலம் நிரூபிக்க முடிந்தால், அது தொடர்பில் பரிசீலிக்கும் முறைமையொன்றை ஏற்படுத்த அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

# பயற்றம் வயலுக்கு வைக்கப்பட்டது தீ!

### *விஷமிகள் வெறிச்செயல்*

கொழும்பு, ஒக். 2

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பயற்றம் வயலொன்றுக்கு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது.

அறுவடைக்குத் தயாராக இருந்த பயற்றம் வயலுக்கே தீ வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. கந்தளாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-இ)

# 'எம்.டி நியூ டயமண்ட்' கப்பல்: இழப்பீட்டு பேச்சு தொடர்கிறது

கொழும்பு, ஒக். 2

இலங்கையின் கிழக்கு, சங்கமன்கண்டிக்கு அப்பால் தீப்பற்றிய மசகுக் கப்பல் தொடர்பான இழப்பீட்டுப் பேச்சுக்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று சட்டமா அதிபர் டப்புல்லா டி லிவேரா அறிவித்துள்ளார்.

எம்.இ.பி.ஏ என்ற கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகத்துக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது. கப்பலின் உரிமையாளர்களிடம் கோரப்பட்ட செலவு உரிமை கோரல்கள் இன்னும் தீர்க்கப்படவில்லை. இதனையடுத்து பேச்சு முடியும் வரை இலங்கை கடற்பரப்பை விட்டு வெளியேற மசகு எண்ணெய் கப்பலுக்கு அனுமதி வழங்க முடியாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கடலில் தீப்பற்றிக்கொண்டது. இந்த தீயைக்கட்டுப்படுத்தி எரிபொருள் கசிவை தடுப்பதில் இலங்கை மற்றும் இந்திய கடற்படையினர் நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். இந்த நிலையில் இதற்கான செலவாக 442 மில்லியன் ரூபா கேட்கப்பட்டது. இதை வழங்குவதற்கு கப்பல் நிறுவனம் ஆரம்பத்தில் உடன்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# கல்வியங்காடு மீன்சந்தையின் இடநெருக்கடி விரைவில் நிவர்த்தி

யாழ்ப்பாணம், ஒக்.2

கல்வியங்காடு மீன் சந்தையில் ஏற்பட்ட இட நெருக்கடி விரைவில் நிவர்த்தி செய்யப் படவுள்ளது.

சந்தைக்கு அருகில் யாழ்.மாநகராட்சி மன்றத்தால் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு நிறைவுறும் நிலையில் உள்ளது. இந்தக் கட்டடம் மீன் விற்பனைக்கு அனுமதிக்கப்படவுள்ளது.

சந்தைக்கு அதிகளவான மக்கள் மீன்களை வாங்க வருகின்றமையால் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த இட நெருக்கடியால் நுகர்வோர் சிரமப்படுவதோடு மீன் வியாபாரிகளும் வியாபாரத்தை உரியமுறையில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ற-17)

# வாழைப்பழ விலையில் திடீர் சரிவு

யாழ்ப்பாணம், ஒக்.2

யாழ்.குடாநாட்டில் வாழைப் பழத்தின் விலை திடீரென சரிந்துள்ளது. தற்போது மழை பெய்ய ஆரம்பித்ததை அடுத்தே, வாழைப்பழத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று வாழைச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரத்தைக் காட்டிலும் தற்போது திடீரென அவற்றின் விலை அரைவாசியாக சரிந்துள்ளது. கிலோ 180 ரூபாவாக விற்கப்பட்ட கதலி வாழைப் பழம், தற்போது 90 ரூபாவாகக் குறைந்துள்ளது. இதரை வாழைப்பழமும் கிலோ 70 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. நீர்வேலி, மருதனார் மடம், திருநெல்வேலி ஆகிய சந்தைகளில் வாழைப்பழத்தின் விற்பனை திடீரென குறைந்துள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதத்தில் குறிப்பாக கதலி வாழைப்பழத்துக்கு பெரும் கிராக்கியும், பற்றாக்குறையும் காணப்பட்டமையோடு அவற்றின் விலையும் அதிகரித்துக் காணப்பட்டது. (ற-17)



# சுங்க வரி செலுத்தாமல் இறக்கப்பட்ட வெளிநாட்டு மது கைப்பற்றப்பட்டது!

கொழும்பு, ஒக். 2

சுங்கவரி செலுத்தப்படாமல் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் என சந்தேகிக்கப்பட்ட அடையாளம் காணப்படாத திரவம் மற்றும் குடிநீர் போத்தல்கள் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.


2018ஆம் ஆண்டு சுங்க வரி செலுத்தப்படாமல் இவை இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

எனினும் இதனை இறக்குமதி செய்த தனியார் நிறுவனம் 2019ஆம் ஆண்டு நவம்பரில் இவற்றை மீள ஏற்றுமதி செய்வதாகக் கூறிய போதிலும் நீண்ட காலமாக அதனைச் செய்யாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளது

அதனடிப்படையில் சுங்க திணைக்கள அதிகாரிகளின் நீண்ட விசாரணைகளைத் தொடர்ந்து இவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-இ)

# உலக சுகாதார அமைப்பு, யுனிசெப் ஊழியர்கள் கொங்கோ பெண்கள் மீது பாலியல் வன்புணர்வு

## 50 பெண்கள் குற்றச்சாட்டு





உலக சுகாதார நிறுவன, யுனிசெப் தொண்டு நிறுவன ஊழியர்களால் கொங்கோ நாட்டுப் பெண்கள் பாலியல் ரீதியிலான சுரண்டல்க ளுக்கு உள்ளாகியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கொங்கோ ஜனநாயக குடியரசில் எபோலா பரவலின் போது அங்கு பணியாற்றிய ஊழியர்களால் இந்தக் குற்றங்கள் அரங்கேறியுள் ளன எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. பிரபல செய்தி நிறுவனங்க ளான த நியூ ஹியூமனிடேரியன் (The New Humanitarian) ரெய்டேர்ஸ் பவுன்டேஷன் (the Thomson Reuters Foundation) இணைந்து மேற் கொண்ட இந்த விசாரணையில் உலக சுகாதார நிறுவனத்தின் ஊழியர்கள், யுனிசெப் தொண்டு நிறுவன ஊழியர்கள் மீது 50 பெண் கள் இது தொடர்பிலான குற்றச்சாட்டு களை முன்வைத்துள்ளனர். பெண்க ளுக்கு மதுபானம் கொடுக்கப்பட்டு மருத்துவமனையில் வைத்து பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக் கப்பட்டுள்ளனர். இதன் காரண மாக இரு பெண்கள் கருவுற்றுள்ள னர். 2018 ஆம் ஆண்டு மார்ச் தொடக்கம் இந்த ஆண்டு வரை இவ்வாறான பாலியல் சுரண்டல் கள் நடந்தன என அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். இதேவேளை, இது தொடர்பாக உறுதியான விசாரணை நடைபெறும் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (வ-இ)



## ஆர்மேனியா - அஸர்பைஜான் போர் பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா அழைப்பு

மாஸ்கோ, ஒக்.2

ஆர்மேனியா மற்றும் அஸர்பை ஜான் நாடுகளுக்கிடையில் சமாதான பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளது. நகோர்னோ கராபக் பிராந்தியத்தின் உரிமம் தொடர்பில் இடம்பெற்றுவரும் பாரிய மோதல்களை, நிறுத்துவதற்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு தொலைபேசி ஊடாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லாவ்ரோவ் தெரிவித்தார். ஆர்மேனியா மற்றும் அஸர்பை ஜான் நாடுகளுக்கிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து இடம்பெற்றுவரும் உக்கிரமான போரில் நூற்றுக்கும் அதிகமான வர்கள் உயிரிழந்துள்ளனர். நகோர்னோ கராபக் பிராந்தியம், அஸர்பைஜானுக்கு சொந்தமா னது என அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் 1994 ஆம் ஆண்டிலி ருந்து அதனை ஆர்மேனியர்கள் ஆளுகை செய்துவருகின்றனர். இந்தப் பிராந்தி யத்துக்கு உரிமை கோரி 1988 ஆம் ஆண்டு தொடக் கம் 1994 வரை போர் இடம்பெற்றி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## என்னைக் கொலை செய்ய முயற்சி செய்தவர் புடினே!

### நவால்னி கூறுகிறார்

தன்னை நஞ்சூட்டி கொலை செய்வதற் கான முயற்சிகளின் முக்கிய சூத்திரதாரி ஜனாதிபதி விளாடிமிர் புடினே என ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்சே நவால்னி தெரிவித்துள்ளார்.

சஞ்சிகையொன்றுக்குவழங்கியசெவ்விலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார். இதனைத் தெரிவிப்பதற்கு நான் அச்சமடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

# வன்புணர்வு செய்யப்பட்டு 19 வயதுப் பெண் படுகொலை

## உத்தரப் பிரதேசத்தில் கொந்தளிப்பு

புதுடில்லி, ஒக.2

உத்தரப் பிரதேசத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த 19 வயது பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப் பட்டு கொலைசெய்யப்பட்டமை மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 14ஆம் திகதி தனது தாயுடன் வயலுக்கு சென்ற அந்தப் பெண் திடீ ரென காணாமல் போயுள்ளார். பின்னர் உடலில் கடுமையான காயங்களுடன், நாக்கு துண்டிக்கப்பட்டு கவலைக்கிட மான நிலையில் கண்டெடுக்கப்பட் டார். மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட பெண் சிகிச்சை பயனின்றி கடந்த செவ்வாயன்று உயிரிழந்தார். பெண் ணின் சடலத்தை குடும்பத்தினருக்குத் தெரியாமல் பொலிஸார் எரியூட்டியுள் ளனர். உயிரிழந்த பெண் 4 பேர் கொண்ட குழுவால் பாலியல் வன்புணர் வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அவர் கள் நால்வரும் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கு தொடர்பாக சிறப்புக் குழு அமைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார். இந் நிலையில் பெண்ணுக்கு நீதி கோரியும் இவ்வா றான சம்பவங்களைக் கட்டுப்படுத்தக் கோரியும் இந்தியாவில் மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன. இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உட்படப் பலர் கைதுசெய்யப்பட் டுள்ளனர். (வ-இ)






# யாழ் மாவட்ட செயலகம் பளுதூக்கலில் சம்பியன்



யாழ்ப்பாணம், ஒக்.2

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்ட செயலக அணிகளுக்கு இடையிலான ஆண், பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில், யாழ் மாவட்ட செயலக அணி சம்பியனானது.

இதன் இறுதியாட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கின் பளுதூக்கல் திடலில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான பளுதூக்கலில் யாழ் மாவட்ட செயலக அணி வீராங்கனைகள் 9 தங்கப் பதக்கங்கள், 6 வெள்ளிப் பதக்கங்கள், 6 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 21 பதக்கங்களைப் பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தனர். வவுனியா மாவட்ட செயலக அணி ஒரு தங்கப் பதக்கம், 3 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 7 பதக்கங்களைக் கைப்பற்றி இரண்டாமிடத்தைச் சுவீகரித்தது.

இதில் ஆண்களுக்கான பளுதூக்கலில் யாழ் மாவட்ட செயலக அணி, 9 தங்கப் பதக்கங்கள், 6 வெள்ளிப் பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 19 பதக்கங்களைக் கைப்பற்றிச் சம்பியனானது. கிளிநொச்சி மாவட்ட செயலக அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. (ற-422)





## தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.2

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கால்பந்தாட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதன் இறுதியாட்டம் நேற்று வியாழக்கிழமை உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியை எதிர்த்து, வேலணை பிரதேச செயலக அணி மோதியது.

இதில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.(ற-422)

## சம்பியனானது சென். லூசியா

மன்னார், ஒக்.2

பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்திய எடிசன் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில், பள்ளிமுனை சென். லூசியா அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதன் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் வள்ளுவர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பள்ளிமுனை சென் லூசியா அணியை எதிர்த்து, அந்தோனியார்புரம் குழந்தையேசு அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடினர்.

சென் லூசியா அணி வீரர் றாபேட் 18 ஆவது நிமிடத்தில் மிகச் சிறப்பான கோலைப் பதிவு செய்ய, முதல் பாதியாட்டத்தில் சென் லூசியா அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் தொடர்ந்து பலப்பரீட்சை நடத்தின. ஆனால் இரு அணிகளாலும் மேலதிக கோல் எதனையும் எடுக்க முடியவில்லை.

இதனால் ஆட்ட முடிவில் பள்ளிமுனை சென் லூசியா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ற-422)





## காலிறுதிக்குள் சென். ஆன்ஸ்

பூநகரி, ஒக்.2

கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழகம் நடத்தும் மாகாண ரீதியிலான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரில், வலைப்பாடு சென் ஆன்ஸ் அணி காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வலைப்பாடு சென்.ஆன்ஸ் அணியை எதிர்த்து, இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் அணி மோதியது.

இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், வலைப்பாடு சென் ஆன்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.(ற-422)

## கரவெட்டி பிரதேச செயலகம் கபடியில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.2

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடி போட்டியில், கரவெட்டி பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதன் இறுதியாட்டம் நேற்று வியாழக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து, தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கரவெட்டிப் பிரதேச செயலக அணி 36:16 என்ற கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ற-422)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 02.10.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.